செ.வெ.எண்: 65 /ஆகஸ்ட் / 2019 நாள்: 22.08.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஓய்வூதியர்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 27.08.2019 அன்று நடைபெறும் - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சிவராசு,இ.ஆப., அவர்கள் தகவல்.

---------

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகின்ற 27.08.2019 அன்று நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.,இ.ஆ.ப.,அவர்கள் தகவல் தெரிவித்துள்ளார்கள்.

**வருகின்ற 27.08.2019-ம் தேதி காலை 10.30 மணிக்கு** திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்திலுள்ள மக்கள் குறைதீர்க்கும் கூட்ட அரங்கில், திருச்சிராப்பள்ளி மாவட்டஆட்சித்தலைவர் மற்றும் சென்னை ஓய்வூதியர் இயக்குநர் ஆகியோர் தலைமையில், அரசுதுறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற ஓய்வூதியரின் ஓய்வூதிய பணப்பயன்கள் தொடர்புடைய, குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறவிருப்பதால் ஓய்வூதிய தொடர்பான குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள விரும்பும் ஓய்வூதியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொன்டு பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**